# சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி...

**முதல் பக்கத் தொடர்ச்சி**

மேற்கொண்டிருக்கிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகளை துவக்கிட தயாராக இருக்கிறது.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால், ஜூலை 2021 முதல் 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து இடப்பட்டுள்ளன. 2,95,339 கோடி ரூபாய் அளவில் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்தும்போது, 4,12,565 நபர்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயமாக கிடைக்கும். அந்த அடிப்படையில்தான், இந்தப் பயணத்தை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

**நூற்றுக்கணக்கான நிறுவனங்களுடன் சந்திப்பு!**

**கேள்வி:** சிங்கப்பூர், ஜப்பானை தொடர்ந்து வேறு எந்தெந்த நாடுகளுக்குச் செல்ல திட்டமிட்டிருக்கிறீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அது பின்னர் தான் முடிவு செய்யப்படும்.

**கேள்வி:** முதலீடுகள் எவ்வளவு ஈர்க்கப்படவுள்ளது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்களை நாங்கள் சந்திக்க இருக்கிறோம். அங்கு சென்ற பிறகுதான் முடிவு செய்யப்படும்.

**கேள்வி:** இந்த பயணம் வெற்றிகரமாக முடியுமா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நிச்சயம் வெற்றிகரமாக முடியும். அதற்கு உங்கள் வாழ்த்துகள் தேவை. வாழ்த்துகளை சொல்லி அனுப்புங்கள். நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.



மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் தக்கார் கருமுத்து தி.கண்ணன் அவர்கள் மறைவினையொட்டி அன்னாரது உடலுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய போது எடுத்தபடம். உடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன்ஜித்சிங் காலோன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### ஆண்டுக்கு நான்கு முறை மாநகராட்சி - நகராட்சி- பேரூராட்சிகளில்

# ஏரியா சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மே 24-

**தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யும் விதமாக, அவ்வமைப்புகளின் வார்டுகள் ஒவ்வொன்றையும், பகுதிகளாக (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும், ஏரியா சபையை (Area Sabha) உருவாக்கும் வகையில், 2010ஆம் ஆண்டு அப்போதைய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் உரிய வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், அந்த சட்ட திருத்தங்களின் கீழ்,2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை விதிகள் வெளியிடப்பட்டன.

அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தை மேலும் செம்மைப்படுத்துவது தொடர்பாக மேற்கொண்டு வரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, ஏரியா சபைகளை அமைத்து நடை முறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், முதல் முறையாக, கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள், ஏரியா சபை கூட்டங்கள் நடத்தப்பெற்றன. இவற்றில், பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்திலும், 2023-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளிலும், மக்கள் தொகையின் அடிப்படையில், மாநகராட்சிகளில் ஒவ்வொரு வார்டையும் நான்கு முதல் பத்து பகுதிகளாகவும், நகராட்சிகளில் நான்கு பகுதிகளாகவும் மற்றும் பேரூராட்சிகளில் மூன்று பகுதிகளாகவும் (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஏரியா சபைகளை அமைக்கவும் மற்றும் ஏரியா சபைகளின் கூட்டங்களை நடத்துவது தொடர்பாகவும் தேவையான வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகளின் 180வது விதியின்படி, ஏரியா சபைக் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, அதாவது, வருடத்திற்கு நான்கு முறை நடத்தப்பட வேண்டும்.

இதன்படி, முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை, ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல்

14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, கிராம சபை கூட்டங்கள், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்களில் நடத்தப்பட்டு வருவதைப் போன்று, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், ஏரியா சபைக் கூட்டங்கள், வருடத்திற்கு நான்கு முறை நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்களில் நடத்தப்படவும், இக்கூட்டங்களில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டு தங்கள் பகுதியின் அடிப்படை வசதி தேவைகள் குறித்து தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவும், தங்கள் பகுதியின் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கவும், மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யவும், அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்பெறச் செய்யவும் ஏதுவாகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஆவின் நிர்வாகத்தில் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்!

## பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் உறுதி

சென்னை, மே 24 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் (22-05-2023) அன்று அம்பத்தூர் பால் பண்ணையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆவின் பால் பண்ணைகளில் கடந்த மூன்று நாட்களாக பால் வினியோகம் தாமதமாக நடைபெறுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் 11 மணிவரை அம்பத்தூர் ஆவின் பால் பண்ணையில் பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தென் மாவட்டங்களிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்கு கொண்டு வரப்படும் பால் டேங்கர் லாரியின் மேலே ஏறி பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு செய்தார். டேங்கர் லாரிக்கு போடப்பட்ட சீல் முறையாக போடப்பட்டிருக்கிறதா எனவும் ஆய்வு செய்தார். பால் பதப்படுத்தப்படும் பிரிவு, தர கட்டுப்பாட்டு பிரிவு, பால் குளிரூட்டும் பிரிவு, பாலித்தீன் பைகளில் பேக்கிங் செய்யப்படும் பகுதி, பால் டப்களை சுத்திகரிக்கும் பகுதி, ஆவின் சந்தாதாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பால் கொண்டு செல்லும் வாகனங்களையும், கணினி வாயிலாக போடப்பட்ட பில்களையும் ஆய்வு செய்தார். ஒப்பந்த ஊழியர்களின் வருகைப் பதிவேடு, பெயர் விவரம் ஆகியவற்றை கேட்டு அறிந்து ஆய்வு செய்தார். குளிர் பதப்படுத்தப்பட்டு பேக்கிங் செய்யப்படும் இடத்தில் பாலித்தீன் பைகளின் தரம் மற்றும் பேக்கிங் செய்யப்படும் கருவிகள் முறையாக வேலை செய்கிறதா எனவும் ஆய்வு செய்தார்.

ஆவின் நிர்வாகத்தில் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதில் ஒரு பகுதியாக பால் சரியான நேரத்திற்கு விநியோகிக்க அனுப்பி வைக்கப்படுகிறதா என்றும் அதில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன என்பதையும் தெரிந்து கொள்வதற்காக திடீர் ஆய்வு மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே 12 நிபந்தனைகள் ஆவின் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு ஒப்பந்தத் தொழிலாளர்கள் குறைகளை கேட்டறிந்து பிறப்பித்த முதல் உத்தரவு ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அவர்கள் ஊதியத்தை வங்கிக்கணக்கில் தான் செலுத்த வேண்டும் என்பதாகும். ஒப்பந்த தொழிலாளர்கள் தங்கள் பணியை நிச்சயமாக ஓரிரு நாட்களில் முழு வீச்சில் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த உள்ளதாகவும், ஆவினில் இருக்கக்கூடிய ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் அதனை நிரப்புவது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தற்பொழுது உற்பத்திக்கு ஆள் பற்றாக்குறை எதுவும் இல்லை, ஆவின் நிர்வா கத்தில் தீவிரமான கட்டுப்பாடு முயற்சிகளை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது நிச்சயமாக எடுப்பேன் என்றும் கூறினார்.

இவ்வாய்வின் போது உயர் அதிகாரிகள், அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# 25 ஆயிரம் இடங்களில் வளரிளம் பருவத்தினருக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.05.2023) தமிழ்நாடு முழுவதும் வளரிளம் பருவத்தினருக்கான 25,000 விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தும் வகையில் சென்னை, சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார். பின்னர் ஆற்றிய உரை வருமாறு:-

கடந்த 2 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கையில் துறைகள் வாரியாக இந்த ஆண்டு முழுவதும் செயல்படுத்திட வேண்டிய திட்டங்கள் குறித்தான அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. அந்த வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முதலாம் ஆண்டில் 110 அறிவிப்புகளும், இரண்டாம் ஆண்டில் 136 அறிவிப்புகளும் வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு, அறிவிப்புகள் குறித்த புத்த கங்கள் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை வரலாற்றில் ஒரு துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் எத்தகைய வகையில் செயல்படுத்தப்பட்டது என்பது புத்தகமாகவே அச்சிட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 106 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியமான அறிவிப்பாகவளரிளம் பருவத்தினர் நல்வாழ்வை மேம்படுத்திடும் வகையில் 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்திற்கு ஒரு முகாம் என்கிற வகையில் நடத்தப்படும்என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 500 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இச்சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த முகாம்களில் 10 முதல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரான மாணவ மாணவியருக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் இரத்த சோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்பு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.தமிழ்நாட்டில் இரத்த சோகை பாதிப்பை பொறுத்தவரை வளரிளம் பெண்களுக்கு 52.9%, வளரிளம் ஆண்களுக்கு 24.6% கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் இரத்த சோகை பாதிக்கப்பட்ட வளரிளம் பருவத்தினர்களை கண்டறிந்து 20 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சை வழங்குவதுடன் இரத்த சோகை இல்லா தமிழ்நாடாக மாற்றுவதே இச்சிறப்பு முகாமின் நோக்கமாகும். தமிழ்நாடு முழுவதும் உள்ள 2127 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 25,524 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 1.2 கோடி வளரிளம் பருவத்தினர் பயனடைவார்கள். இதில் பள்ளி மற்றும் பள்ளி செல்லா வளரிளம் பருவத்தினரும் அடங்குவர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

**கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்**

இந்த துறையில் முதலாம் ஆண்டு வருமுன் காப்போம் என்ற திட்டம், ஒன்றியத்திற்கு 3 மருத்துவ முகாம்கள், ஒவ்வொரு மாநகராட்சிக்கும் 4 முகாம்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கு 15 முகாம்கள் என 1,250 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,260 முகாம்கள் முதலாம் ஆண்டு நடத்தப்பட்டது. அதே போல் கடந்த ஆண்டு 1,250 நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,532 முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்

**முன்னோடி திட்டங்கள்**

2006-ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, பீகாரில் சானிடரி நாப்கின் மிகவும் அழுக்கான துணிகளையும், கோணிப்பைகளையும் பயன்படுத்தி 4 இளம்பெண்கள் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார்கள் என்ற செய்தி பத்திரிக்கைகளில் வெளியானது. அப்போது நடைபெற்ற பட்ஜட் மீதான விவாதத்தில்நான் மேயராக பெறுப்பேற்றிருந்த அந்த சமயத்தில், தற்போதைய முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் துணை முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய அறிவுறுத்தலை பெற்று 65 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இலவசமாக சானிடரி நாப்கின் கொடுக்கும் திட்டம் கொண்டு வரலாம் என்று யோசனையை தெரிவித்தேன். ஆனால் இது மிகவும் உணர்ச்சிப்பூர்வமான விஷயம் என்பதால் இந்த திட்டம் செயல்படுத்த வேண்டாம் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. உடனடியாக இந்த திட்டத்தை அன்றைய துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உயர் அதிகாரிகள் கொண்டு சென்றனர். உடனடியாக இந்த திட்டத்திற்கு அன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்து கொண்டுவரச் சொன்னார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகராட்சி சார்பில் இந்த் திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களுக்கு தேவை யான முன்னோடியான திட்டங்களை கொண்டு வரும் வகையில், இன்று வளரிளம் பருவத்தினருக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மாணவ மாணவிகள் பின்பற்றும் போது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் முன்னிலையில் மருத்துவரின் அறிவுறைப்படி மருந்து மாத்திரைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் ஊட்டியில் இரும்புச் சத்து மாத்திரைகளை அதிக அளவில் ஒரு மாணவி எடுத்துக்கொண்டதால், உடல் நலம் பாதிக்கப்பட்டார். எனவே ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் முன்னிலையில் மாணவர்கள் மருத்துவர்கள் வழிகாட்டுதலின்படி மாத்திரைகளை மிக கவனமாக உட்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணைமேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், நிலை குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர். ஜி.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. பத்மஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர் பாபு தலைமையில் –

# சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## சுதா தீனதயாளன் - இராஜேஸ்வரி ஸ்ரீதர் வேண்டுகோள்

சென்னை, மே 24 -

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக துணைச் செயலாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக துணைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (24.05.2023 - புதன்கிழமை) மாலை 4.30 மணிக்கு எம்.டி.எச். சாலையில் உள்ள ஜெயின் மஹால் திருமண மண்டபம் (நாதமுனி திரையரங்கம் அருகில்), வில்லிவாக்கம், சென்னை49- ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணியினர் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.




ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பாக திராவிட மாடல் அரசின் 2ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஆலந்தூர் தர்மராஜா கோவில் தெருவில் நடந்தது.இந்த கூட்டத்திற்கு வடக்கு பகுதி திமுக இளைஞரணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார் தலைமை வகித்தார். பகுதி செயலாளர் பி.குணாளன், மண்டலக் குழு தலைவர் என்.சந்திரன், பகுதி மாணவரணி அமைப்பாளர் வெ.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் வரவேற்றார் இந்த கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் எஸ்.பத்மபிரியா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.05.2023) சென்னை, சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வளரிளம் பருவத்தினருக்கான விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், நிலை குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி.பத்மஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்